(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 46.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 சனவரி 28, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

62/ ’15

1.

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் பாவனைக்கு உதவாததும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டதுமான பொருட்களை இந்நாட்டிற்கு கொண்டுவருகின்றார்கள் என்பதையும்;

(ii) இதற்கு இவர்கள் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி சிதைவடைந்த பொருட்கள் எமது நாட்டின் சூழலுக்கும் பிரச்சினையை தோற்றுவிக்கக் கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாடுகளிலிருந்து பாவிக்கப்பட்ட பழைய வீட்டுத் தளபாடப்பொருட்கள் போன்றவற்றை இந்நாட்டிற்கு கொண்டுவருவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

80/ ’15

2.

கௌரவ சந்திம கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) சுமார் கடந்த ஒரு தசாப்த காலமாக தொல்பொருட்கள் மற்றும் புதைபொருட்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளமை மற்றும் திருடர்கள் கைப்பற்றியுள்ளமை பற்றி பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகள் மூலம் தவறாளிகளாக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

211/ ' 15

3\.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த அரசாங்கத்தினால் 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கும் 5000 ஆரம்ப பாடசாலைகளுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் ED/3/37/6/147/sub ஆம் இலக்க 2013.01.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம், 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு சமாந்திரமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருணாகல், இரத்தினபுரி, பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, மாத்தறை, மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குரிய தமிழ் மொழிமூல முஸ்லிம் ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவுகளை முன்வைத்துள்ள மக்கள் பிரதிநிதிகளின் பெயர்கள், பதவிகள் மற்றும் அவ்வாறு முன்மொழியப்பட்ட பாடசாலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி முன்மொழிவுகளில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட பாடசாலைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

234/ ' 15

4\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அண்ணளவாக ரூபா 6 1/2 கோடி செலவிடப்பட்டு கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடாத்தப்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் தேசிய மாநாட்டின் ஊடாக பொதுமக்களின் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டுக்கு ரூபா 63,723,574/- செலவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரி யாரென்பதையும், இவருக்கு அத்தகைய அங்கீகாரம் வழங்குவதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iii) மாநாடொன்றுக்காக இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை செலவிடுகின்ற போது கேள்விப்பத்திரம் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக திணைக்கள மட்டத்தில் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக நிதிசார் குற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) வாழ்வின் எழுச்சி திணைக்களம் இழந்துள்ள ரூபா 06 கோடிக்கு மேற்பட்ட பணத் தொகை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

273/ ’15

5.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தேசிய பாதுகாப்பிற்கும் சனநாயகத்திற்கும் ஆபத்து என்பதால், 2015 சனவரி 08 ஆம் திகதி இரவு சனாதிபதி தேர்தல் பெறுபேறுகளை இடைநிறுத்துவதற்கான சூழ்ச்சி பற்றி முன்னுரிமை அடிப்படையில் புலனாய்வு செய்யுமாறு கோரி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவினால் 2015.01.14 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப் பட்டதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி புலனாய்வு பற்றிய சட்ட மாஅதிபரின் அபிப்பிராயம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

282/ ’15

6.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொலன்னாவ பிரதேசம் போதைவஸ்து விநியோகிக்கும் ஒரு நிலையமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், ஒரு மாதத்தில் இப்பிரதேசத்தினூடாக விநியோகிக்கப்படும் போதைவஸ்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளதா;

(iii) கொலன்னாவ பிரதேசத்தை மையமாகக்கொண்டு நடைபெறும் போதைவஸ்து விநியோகத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) இதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

312/ ’15

7.

கௌரவ ஜே. எம். ஆனந்த குமாரசிறி,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள ருஹுணு மகா கதிர்காம ஆலயத்திற்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட காணியிலிருந்து நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் ஏக்கர் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆலயத்திற்கு சொந்தமான காணிகள் பெருமளவில் வர்த்தகர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுவதால் சேனைப் பயிர்ச் செய்கையின் மூலம் வாழ்க்கையை கொண்டுநடாத்துகின்ற விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்குள்ள உரிமை இழக்கப்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கான காணிகளை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்றை தயாரிப்பாரா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மொனராகலை மாவட்டத்தில் உருவாகக்கூடிய தீவிர காணிப் பிரச்சினையை கருத்திற்கொண்டு தொடர்ந்தும் பெருமளவில் வர்த்தகர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதை இடைநிறுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

313/ ’15

8.

கௌரவ ஹேஷா விதானகே,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரக்வான - மாதம்பே வீதியை காப்பட் இடும் கருத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத் திட்டம் பாரியளவில் மாற்றப்பட்டு கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும்;

(iii) பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மீண்டும் ஆரம்பத் திட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு இணங்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆரம்பத் திட்டம் பாரியளவில் மாற்றப்பட்டு கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்பத் திட்டத்திற்கு அமைவாக மேற்படி வீதியின் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் உரியவாறு மேற்கொள்ளப்படாமையால் மேலதிகமாக செலவிட நேரிடுகின்ற பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தை பொறுப்புக்கூறவேண்டியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

63/ ' 15

9.

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தற்போது இலங்கையில் பெருமளவில் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களில் ஒரு பகுதி பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்படுதல் சூழல் மாசடைதலுக்கு பிரதானமான காரணியாக மாறியுள்ளதென்பதையும்;

(iv) மக்களின் சுகதாரத்திற்கும் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் அச்சுறுத்தலாக அமைகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆண்டொன்றுக்கு அகற்றப்படும் இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் சம்பந்தமாக வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) தற்போது அவ்வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் பற்றி ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆய்வை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் அவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

216/ ' 15

10.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திலிருந்து கொலொன்னாவை (வதுல்லவத்த மற்றும் மஹபுத்கமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவு) ஊடாக இடப்பட்டுள்ள உயர் மின்னழுத்த மின் கம்பிகளின் வோல்ற் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உயர் மின்னழுத்த மின் கம்பிகளை இடும்போது உருக்கு மின் கம்பங்களை நடுவதற்காக சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கான இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகளின் உரிமையாளர்களாக இனங்காணப் பட்டிருந்தவர்களின் பெயர்கள், முகவரிகள், இழப்பீடாக வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் இழப்பீடு வழங்கப்பட்ட திகதி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

கௌரவ எஸ்.எம். மரிக்கார் ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் ஒரே சமனான அனுகூலங்கள் வழங்கப்படுகின்றனவா;

(ii) இன்றேல், அனுகூலங்கள் வழங்கப்படும் முறையியலொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், அம்முறையியல் யாது;

என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டில் அப்போதைய கல்வி அமைச்சரால் அடிக்கல் நடப்பட்ட கொட்டிகாவத்தை ராஜசிங்ஹ வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(ii) மேற்படி பாடசாலையில் நிலவும் 13 ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

(iii) மேற்படி பாடசாலையின் பழுதடைந்துள்ள கட்டடங்களை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டம் எவ்வளவு காலத்தில் ஆரம்பிக்கப்படும்;

(ii) இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் ஒரே அளவான எண்ணிக்கையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்படுமா;

(iii) ஆமெனில், இப்பாடசாலைகளின் எண்ணிக்கை யாது ;

(iv) இந் நடைமுறை ஒவ்வொரு பிரதேசத்திலும் சமாந்தரமாக ஆரம்பிக்கப்படுமா;

(v) முன்னுரிமை வழங்கப்படும் பிரதேசங்கள் உள்ளனவா;

(vi) ஆமெனில், இப்பிரதேசங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2015.10.06 மற்றும் 2016.01.09 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2015.12.19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரையின் செயற் சாதனைச் சங்கத்தைகச் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதி,— (136 ஆம் அத்தியாயமான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர்மானம்,— ஒத்திவைக்கப்பட்ட விடயம் (சனவரி 09, 2016),— "இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுவதாலும்;

2015, சனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மக்கள் சட்ட ஒழுங்குக்கு மதிப்பளித்து சனநாயகத்தை வலுப்படுத்தும் அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்கு தெளிவான மக்கள் ஆணை மக்களால் வழங்கப்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, புதிய அரசியலமைப்பை சட்டவாக்கம் செய்து, மற்றும் பலவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்புக்கு வலுவூட்டுவதற்கான தனது அபிலாசையினைத் தெளிவாகக் கூறியுள்ளதாலும்;

மேலும் பல்வேறு விடயங்களுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழித்து, விருப்பு வாக்கு முறைமையை நீக்கி நியாயமான பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை உறுதிப்படுத்தி, அனைத்து பிரஜைகளினதும் சனநாயக உரிமைகளை பலப்படுத்தி, தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றை வழங்கக் கூடிய, தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சட்ட விதியை மதிக்கும் அரசியல் கலாசாரமொன்றை தாபிக்கக் கூடிய, மனித கௌரவத்தை உறுதிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுயாதீனத்தன்மைக்கும் உத்தரவாதம் அளித்து பொறுப்புமிக்கதும் வகைகூறக் கூடியமதுமான அரசாங்கமொன்றை மேம்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை சட்டவாக்கம் செய்தல் அவசியமாகின்றதனாலும்;

1. இலங்கையின் புதிய அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதனகத்து இதன் பின்னர் 'அரசியலமைப்புச் சபை' என அழைக்கப்படும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு (7) பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவுசெய்யப் படுதலும் வேண்டும்.

   கௌரவ சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. அரசியலமைப்பு சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இருபது (20) ஆக இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசியலமைப்பு சபைக்கான அரசியலமைப்பு சார்ந்த ஆலோசகர்களையும்;

   (ஆ) அரசியலமைப்பு சபைக்கான ஒரு சட்டத்துறைசார் செயலாளரையும் அத்தகைய சட்டத்துறைசார் செயலாளரின் உதவியாளர்களையும்;

   (இ) அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களினதும் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் நோக்கத்துக்காக அரசியலமைப்பு சபையின் பணியாளர்களையும்; மற்றும்

   (ஈ) அரசியலமைப்பு சபையின் (சமூக ஊடகங்களை உள்ளடக்கிய) ஊடக பணியாளர்களையும் அரசியலமைப்பு சபை கொண்டிருத்தல் வேண்டும்.

   ஊடகப் பணியாளர்கள் இணையத்தளம் ஒன்றை நிறுவிப் பேணுவதுடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு தகுந்த விளம்பரம் வழங்குவதற்குப் பொருத்தமான ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

   அரசியலமைப்புச் சபையினதும் அதன் குழுக்களினதும் நடவடிக்கைகளும் அவ்வாறே, பொதுமக்களின் கருத்துக்களும் / சமர்ப்பிப்புகளும் ஆவணப்படுத்தப் படுவதையும் அத்தகைய வேறு தொடர்பான நிபுணத்துவ அல்லது தொழில்நுட்ப அபிப்பிராயங்களுடன் அத்தகைய இணையத்தளங்களில் பிரசுரிக்கப்படுவதையும் ஊடகப் பணியாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

   (அ) பிரதம அமைச்சர் (தவிசாளர்), பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், மற்றும் அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்கள் பதினேழு (17) பேரை விஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு.

   வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் புதிய அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள்.

   ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு (11) பேரை விஞ்சாதவாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

   ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. அரசியலமைப்பு சபை அதன் முதலாவது அமர்வின்போது:—

   (அ) பிரதித் தவிசாளர்களைத் தெரிவுசெய்தலும்;

   (ஆ) வாசகம் 5 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களைத் தீர்மானித்தலும்; அத்துடன்

   (இ) வாசகம் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

7. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்காக அரசியலமைப்பின் வரைவொன்றை பிரேரிக்கும் தீர்மானத்தை சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழுவைக் கோரும் அரசியலமைப்பு சபை மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்தை பிரதம அமைச்சர் அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. அரசியலமைப்பு சபை அதன் அமர்வுகளை பாராளுமன்றச் சபையில் நடாத்துவதற்கு இத்தால் அதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:

ஆயினும், மேல் மாகாணத்திற்கு வெளியே ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதன் கூட்டங்களை நடத்துவதற்கு அரசியலமைப்பு சபை தீர்மானிக்கலாம்:

ஆயின், மேலும் பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களைப் பிரேரித்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை பாராளுமன்றச் சபையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

9. அரசியலமைப்பு சபையின் அல்லது ஏதேனும் அதன் குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சேவைகளுக்காக எந்தவொரு நிறுவனத்தின் சேவைகளையும் வழிப்படுத்தும் குழு கோரலாம்.

10. அரசியலமைப்புச் சபைக்கு அத்துடன் / அல்லது அதன் பல்வேறு உபகுழுக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஏனைய நிபுணர்களை வழிப்படுத்தும் குழு நியமிக்கலாம்.

11. அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டு உடனடியாக வெளியிடப்படுதலும் வேண்டும். பொருத்தமானவிடத்து, அரசியலமைப்பு சபையின் அத்துடன்/ அல்லது அதன் உப குழுக்களின் நடவடிக்கைகளை ஒலிபரப்பு/ஒளிபரப்பு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சபை மேற்கொள்ளுதல் வேண்டும்.

சந்தேகங்களை நீக்குவதற்காக, மேலே சொல்லப்பட்ட விடயங்களை வெளியிடுவதற்கு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரிவு 17இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் விசேட அனுமதி குறிப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என இத்தால் குறிப்பாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

சந்தேகங்களை நீக்குவதற்காக, அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் நடவடிக்கைகள் ஏக காலத்தில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன் இத்தால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளின் வெளியீடு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரகாரம் தவறொன்றாக அமையாது எனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

12. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக எந்தவொரு ஆளையும் அரசியலமைப்பு சபையின் முன் வரவழைப்பதற்கான தத்துவத்தை அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

13. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக அத்துடன் / அல்லது பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் முடிவுகளை அறிக்கை செய்வதற்காக பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் எவரேனும் உறுப்பினரை வரவழைப்பதற்கான தத்துவத்தையும் அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

14. இது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு சபையின் அலுவல்களை நடத்துவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதற்கு அதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது:

ஆயின், வழிப்படுத்தும் குழுவின் உடன்பாட்டுடன் பிரதம அமைச்சரால் பிரேரிக்கப்படும் தீர்மானத்தைப் பின்பற்றி அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளில் இதற்கு முரணாக எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைமுறை விதிகள் இந்தத் தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

15. அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் பற்றிய அறிவித்தல் பிரதம அமைச்சரினால் அல்லது அது பற்றிய வழிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்துடன், பிரதம அமைச்சரினால் அத்தகைய நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் அமைச்சரவையின் அத்தகைய அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

16. வாசகம் 5(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் அத்தகைய ஒவ்வொரு உப குழுவும் நியமிக்கப்பட்டு பத்து (10) வாரங்களினுள் வழிப்படுத்தும் குழுவுக்கு தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. வாசகம் 5(ஆ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் அறிக்கைகளையும் பொதுமக்கள் பிதிநிதித்துவக் குழுவின் அறிக்கையையும் பரிசீலித்ததன் மீதாக, வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. அரசியலமைப்பு சபை அதன் பின்னர் அறிக்கையினதும் அரசியலமைப்பு வரைவினதும் (ஏற்புடையதாயின்) பொதுவான அனுகூலங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி விவாதிப்பதுடன் உத்தேச திருத்தங்கள் பற்றியும் விவாதிக்கலாம். அத்தகைய விவாதத்தின் இறுதியில், “இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தையும் சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழு கோரப்படுமாக” என்னும் வினா அக்கிராசனத்தினால் அரசியலமைப்புச் சபைக்கு விடப்படும்.

19. அதன் பின்னர், வழிப்படுத்தும் குழு, விவாதத்தின்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களை, ஏதேனும் இருப்பின், பரிசீலித்து அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்கு இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இறுதி அறிக்கையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானமும் அரசியலமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரித்தல் வேண்டும்.

20. 18 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதத்தின் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

தவிசாளரால் அல்லது தவிசாளர் வருகை தந்திராத சந்தர்ப்பத்தில் எவரேனும் பிரதித் தவிசாளரால் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கம் வரிசைக் கிரமப்படி வாசிக்கப்படல் வேண்டும்.

(i) வாசகமொன்றுக்கு ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ளலாம் அல்லது வாசகங்கள் நீக்கப்படலாம் அல்லது புதிய வாசகங்கள் சேர்க்கப்படலாம்.

(ii) விவாதத்தின் இந்தக் கட்டத்தின் போது அரசியலமைப்பு வரைவின் விபரங்கள் அன்றி அதன் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடலாகாது.

(iii) அரசியலமைப்பு வரைவின் ஏதேனும் முன்னைய பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதல்லாத திருத்தங்களைப் பிரேரிக்க முடியாது.

(iv) அரசியலமைப்பு வரைவின் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரும் வரைவு தொடர்பான விவாதம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னரும் எவரேனுமொரு உறுப்பினர் தவிசாளரின் அனுமதியின் பேரில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வாசகத்துக்கு திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

(v) வாசகம் ஒன்றுக்கான திருத்தம் பற்றிய வினா முழுமையாக அக்கிராசனத்தினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாசகமொன்று பிற்போடப்படலாம்.

(vi) அரசியலமைப்பு வரைவின் மீதி வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரும் புதிய வாசகங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் பிற்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகளை பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னர் புதிய வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அதனை முதலாவது மதிப்பீடாக கருதுதல் வேண்டும். இதன் தொடரும் வினாக்கள் ''வாசகம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்'' மற்றும் ''வாசகம் (அல்லது திருத்தப்பட்டதற்கு அமைவான வாசகம்) அரசியலமைப்பு வரைவில் சேர்க்கப்படும்'' என்பனவாகும்.

(viii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் இவை புதிய வாசகங்களாகவே கருதப்படல் வேண்டும்.

(ix) எல்லா வாசகங்களும் அட்டவணைகளும் அத்துடன் பிரேரிக்கப்பட்ட புதிய வாசகம் அல்லது அட்டவணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முகவுரை, ஏதேனும் ஒன்று இருப்பின், அது பரிசீலிக்கப்பட்டு 'இது அரசியலமைப்பு வரைவின் முகவுரையாக இருக்குமாக' என்ற வினாவை விடுத்தல் வேண்டும்.

(x) அரசியலமைப்பு வரைவின் பெயரில் ஏதேனும் திருத்தங்கள் அவசியப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் இறுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 42, 43 மற்றும் 44இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சபையின் நடைமுறைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

22. அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அரசியலமைப்பு வரைவு தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்காதவிடத்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சபையும் குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

23. அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கையும் மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

24. அத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரசியலமைப்பின் 75(ஆ) மற்றும் 120(ஆ) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் அரசியலமைப்பை முற்றுமுழுதாக நீக்கி பதிலீடு செய்வதற்கான சட்டமூலமாக அமைச்சரவை சான்றுபடுத்துவதோடு அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு கருதப்பட்டு மக்கள் தீர்ப்புக்காக மக்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

25. இதனை அடுத்து அரசியலமைப்பின் உறுப்புரை 78(1) இன் பிரகாரம் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. அதன் பின்னர், சனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(2)இன் பிரகாரம் சட்டமூலத்தை ஒவ்வொரு மாகாண சபைகளின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய அனைத்து சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

27. இதன் பின்னர் பிரதம அமைச்சர் அத்தகைய சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

28. மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையினால் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரிக்க வேண்டும்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் கூறப்பட்ட சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்குமிடத்து, சட்டமூலம் விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அரசியலமைப்பின் 79ஆவது உறுப்புரைக்கு அமைய தகுந்தவாறு சான்றுப்படுத்துவதுடன் இலங்கையின் இறைமை உரித்தாக்கப்பட்டுள்ள மக்களினால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் வரை, சட்டமூலம் சட்டமாகாது.

29. இதன் பின்னர் அரசியலமைப்பின் 85(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிப்பதற்காக சனாதிபதியினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30. சட்டமூலம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பின் 80(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின் சட்டமூலம் சட்டமாக மாறும்.

31. அரசியலமைப்புச் சபை மற்றும், 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

32. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அரசியலமைப்புச் சபையினால் பிரேரிக்கப்பட்டவாறு இவ்வாறான அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் அல்லது திருத்தத்துக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்க வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

33. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம் அரசியலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 4.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.